## *Drinking Water Supply Schemes*

* 336 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Water Supply and Drainage Board has taken up the execution of the Tuticorin Water Supply Scheme; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) தூத்துக்குடி நகராட்சிக்கென நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியத்தின் தலைமைப் பொறியாளர் தயாரித்துள்ளார். இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 268 லட்சமும் அதைப் பேணிவர ஆண்டுதோறும் ரூ. 2.62 லட்சமும் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் நிலையைச் சேர்ந்த "A" கட்டப் பணிக்கு அரசு ஏற்கெனவே நிர்வாக ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. அக்கட்டப் பணியை நிறைவேற்ற ரூ. 56.50 லட்சமும் அதைப் பேணிவர ஆண்டுதோறும் ரூ. 2.62 லட்சமும் செலவாகும். ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் கடனுதவியுடன் இத்திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது இது நிறைவேற்றப் படக்கூடிய கட்டத்தில் இருக்கிறது.

**திரு. என். டென்னிஸ்:** அது எப்போது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிவிக்கிறபோது இது நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் கேட்கப்பட்ட கடன் தொகைகள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறோம். நான் அறிந்த வரையில் ஓரிரு மாதங்களில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

**திரு. இரா. இராமலிங்கம்:** இந்தத் திட்டத்தின் பயனாக தூத்துக்குடிக்கு எவ்வளவு தண்ணீர் அதிக பட்சம் கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இதனுடைய முழு அளவும் சரியாகத் தெரிவிக்க வாய்ப்பில்லை. 1982-ம் ஆண்டு வரையிலுள்ள காலத் தேவைக்கான குடிதண்ணீர்த் திட்டம் இப்போது முதல்

*1974 மார்ச் 9]*

கட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது. Requirements of the town up to 1981. அதற்குப் பிறகு 2000-ம் ஆண்டில் தேவையான தண்ணீர் அளவுக்கு செகண்ட் ஸ்டேஜ் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்குப் பிறகு மூன்றாவது ஸ்டேஜ் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். முதல் திட்டம் 1982-ம் ஆண்டு வரையில் தேவைப்படுகிற தண்ணீருக்கு தூத்துக்குடி நகரத்திற்கு மட்டும் நிறைவேற்றப்படுகிறது. '20 மிலியன் காலன் பர் டே வாட்டர் சப்ளை ஸ்கீம்' என்ற திட்டமும், '3 மிலியன் காலன் பர் டே வாட்டர் சப்ளை ஸ்கீம்' என்ற திட்டமும் தனியாக தூத்துக்குடி தொழிற்சாலைகளுக்காகவும், துறைமுகப் பகுதிக்காகவும் தனித் தனியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தூத்துக்குடித் திட்டத்திற்கான தண்ணீர் தாம்பிரவருணி ஆற்றின் கடைசிப் படுகையில் இருந்து பம்ப் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பகுதியிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுவது ஏற்கனவே நடைமுறையிலுள்ள திட்டப் பகுதிகளுக்கே போதுமானதாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்திற்கு வேறு எங்கிருந்தாவது தண்ணீர் கொண்டு போக அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டு விட்டது.

The source for the scheme is Tamiraparani river. The scheme will cover an ultimate population of 3,50,000. The L.I.C. have agreed to provide loans for the scheme. In 1971–72 the L.I.C. have sanctioned a loan of about Rs. 13 lakhs and for 1972–73 and 1973–74 the L.I.C. is apprachoed for loans. Therefore the whole scheme is in progress. Now we cannot alter the scheme.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை முழுவதும் கடனாக வழங்கப்பட்டு முனிசிபாலிடிகள் திரும்பச் செலுத்த வேண்டுமென்ற நிலை இருக்கிறதா அல்லது மானியமாகக் கொடுக்கப்படுகிறதா? அந்தத் தண்ணீரைக் கொண்டு செல்லும்போது இடையிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிற திட்டம் இருக்கிறதா? சிறு பஞ்சாயத்துக்களும் நகரப்

பஞ்சாயத்துக்களும் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றால் முடியாத நிலை இருப்பதால் அவர்களுக்கு மானியம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாகவே, மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது நீண்டகாலக் கடன் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டுவதுதான் மக்களுக்கும் நல்லது. தமிழகத்தில் 4 கோடி 20 லட்சம் மக்களுக்குப் பரவலாக குடிதண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்ற அது வலிவு தரும்.

அரசாங்கத்தின் பொறுப்பில் நிறைவேற்றுவதாக இருந்தால் மக்களிடத்தில் வரி வசூலிக்க வேண்டிய வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டத்திற்கு ஆயுள் காப்பு கடனைத் தவிர, மாநில அரசு முதலில் 5.33 லட்சமும், பின்னர் 3.81 லட்சமும் கடனாகக் கொடுத்திருக்கிறது. 1971-72, 1972-73-ல் கடனாகக் கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு சலுகை கொடுத்தால் பிறகு எல்லாப் பஞ்சாயத்துக்களுமே அந்த மாதிரிக் கேட்க முன் வரும். பஞ்சாயத்துக்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சுகாதாரத்திற்கு அடிப்படையான குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசே இந்தக் காரியங்களை தர்மத்தைப் போன்று செய்வதாக இருந்தால் ஏதோ சில பகுதிகளுக்குக் கிடைக்கும். பல்வேறுவிதமான வாதத்திற்கும், வேதனைக்கும் உள்ளாகும்.

* 337 வினு—திரு. க. உசோ. எட்மண்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டம், காயல்பட்டினம் பேரூராட்சி மன்றத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து கடன் நிதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு கிடைக்கப் பெற்றவுடன் திட்ட வேலைகள் துவக்கப்படும்.